# DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KAMUTHI.

CC. No. 74/2019

Prosecution witness – PW.3

| | | | |
|---|---|---|---|
| Name | :திரு. சண்முகநாதன் | Caste: | |
| Father's Name | : | Calling: | |
| Village | : | Religion: | |
| Taluk | : | Age: | |

(Accused present)
26.02.2024 – 12.05 PM
சாட்சியை நிலைய முதல் நிலைக்காவலர்–2148 அவர்கள் அடையாளம் காட்டினார்.

<u>முதல் விசாரணை</u>

1. நான் தற்போது அபிராமம் குரூப் கிராம உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் வழக்கு சம்பவ சமயத்தில் அச்சங்குளம் கிராம உதவியாளராக பணிபுரிந்து வந்தேன். ஆஜர் எதிரியைத் தெரியும். அ.சா.1 யைத் தெரியும்.

2. எனக்கு வழக்கு சம்மந்தமாக எதுவும் தெரியாது.

3. கடந்த 01.07.2012ம் தேதியன்று மதியம் சுமார் 02.00 மணியளவில் அச்சங்குளம் கிராம நிர்வாக அலுவலர் என்னை அபிராமம் காவல்நிலையத்திற்கு வருமாறு போன் மூலம் தகவல் சொன்னார். நான் 02.30 மணியளவில் காவல் நிலையம் சென்றேன். நான் சென்றபோது பார்த்திபனூர் காவல் நிலைய ஆய்வாளர் இருந்தார். அவருடன் நானும், கிராம நிர்வாக அலுவலரும் சுகன்யா சேம்பருக்குச் சென்றோம்.

4. காவல் ஆய்வாளர் அந்த இடத்தை பார்வையிட்டு ஒரு குறிப்பு தயார் செய்தார். அதில் நான் கையொப்பம் செய்தேன். அப்போது மதியம் 03.00 மணி இருக்கும். என்னுடன் கிராம நிர்வாக அலுவலரும் கையொப்பம் செய்தார். பார்வை மகஜரிலுள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது. அந்த பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.2 ஆகும். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>:–

1. 01.07.2012ம் தேதியன்று மதியம் 01.00 மணியளவில் அ.சா.1 விசாரணைக்காக சம்பவ இடம் சென்றபோது நான் உடன் செல்லவில்லை. அவர் எப்போது சென்றார் என்று எனக்கு தெரியாது. கிராம நிர்வாக அலுவலர் எங்கு

சென்றாலும் நான் உடன் செல்வது வழக்கம்.

2. சேம்பர் முழுவதுமாக சுற்றிப் பார்த்தார். சேம்பருக்கு காம்பவுண்ட் சுவர் கிடையாது. தொழிலாளர்களுக்காக கட்டப்பட்ட வீட்டிற்குள் சென்று பார்க்கவில்லை. தொழிலாளர்கள் வீட்டிற்குள் இல்லை. வேலை பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

3. சம்பவ இடத்தைப் பார்வையிட்டுக் குறிப்பு எடுத்துக் கொண்டார்கள். கையொப்பத்தை எங்கு வைத்து செய்தேன் என்று ஞாபகமில்லை.

4. நான் சம்பவ இடத்தில் வைத்து கையொப்பம் செய்யவில்லை என்றால் சரியல்ல. காவல் நிலையத்தில் தயாரிக்கப்பட்ட ஆவணத்தில் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்து விட்டு அ.சா.1 உயர் அதிகாரி என்பதால் அவர் கேட்டுக் கொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(S/d. ஜெ. சங்கீதா)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கமுதி.